**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

**அசல் வழக்கு எண்.365/2024** **நாள்- 28.11.2025**

**வா.சா.1. சர்க்கரை**

**குறுக்கு விசாரணை பிரதிவாதிகள் தரப்பில்**

நான் B.Sc. Agri படித்துள்ளேன். பிரதிவாதிகளை எவ்வாறு தெரியும் என்று கேட்டால் என் சகோதரி வீட்டிற்கு அருகில் இருந்ததால் எனக்கு தெரியும். நானும் பிரதிவாதிகளும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர்கள் இல்லை. 1ம் பிரதிவாதி ஆட்டோ ஓட்டுனர் என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி தையல் தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என் மனைவி பெயர் மணிமேகலை. என் மனைவிக்கு 2ம் பிரதிவாதி அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அடமானம் வைத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி வரை அடமானத்தை பிரதிவாதி மீட்கவில்லை என்றால் சரிதான். 03.01.2013ம் தேதி அந்த சொத்தைப் பொறுத்து 2ம் பிரதிவாதி என் மனைவி பெயருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். பொது அதிகார ஆவணத்தை பயன்படுத்தி நானும் என் மனைவியும் 04.01.2013 ஒரு கிரைய உடன்படடிக்கை ஏற்படுத்திக் கொண்டோம் என்று சொன்னால் சரிதான். கிரைய உடன்படிக்கையில் எவ்வளவு தொகை முன்பணம் கொடுத்தேன் என்று ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் கிரைய உடன்படிக்கை தான் நானும் என் மனைவியும் செய்து கொண்டது என்றால் சரிதான் அது **பி.வா.சா.ஆ.1-** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1-ல் முன்பணம் ரூ.50000/- என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தில் 2ம் பிரதிவாதியின் சொத்தை விற்கும் பட்சத்தில் அதற்கான கணக்கு விவரங்களை 2ம் பிரதிவாதியிடம் காட்ட வேண்டும் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரூ.50000/- முன்பணத்தை 2ம் பிரதிவாதியிடம் கொடுத்தற்கான பணப்பற்று ரசீது என் மனைவி பெற்றுள்ளாரா என்று எனக்கு தெரியாது. எனக்கும் என் மனைவிக்கும் நாளது தேதி வரை எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எங்கள் வீட்டில் நடக்கும் விவரங்களை என் மனைவி என்னிடம் கூறுவார் என்றால் சரிதான். பொது அதிகார ஆவணத்தின்படி கிரைய ஒப்பந்தம் மேற்கொண்டதில் ரூ.50000/- முன்பணம் கொடுத்த விவரத்தை எனக்கு தெரியாது என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2016ம் ஆண்டு நானும் என் மனைவியும் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டோம் என்றும், முன்பணம் ரூ.50000/-த்தை என் மனைவியிடம் இருந்து திரும்ப பெற்றுக் கொண்டேன் என்றால் சரிதான். அந்த ரூ.50000/- என் மனைவி கையில் வைத்திருந்ததை நான் திரும்ப பெற்றுக் கொண்டேன். அதனால் என்னிடம் பெற்ற முன்பணம் ரூ.50000/-த்தை 2ம் பிரதிவாதியிடம்

கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி பொது அதிகார ஆவணத்தின்படி பெத்தம்மாள் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கிரைய ஆவணம் தான் என் மனைவி பெத்தம்மாளுக்கு எழுதிக் கொடுத்தது என்றால் சரிதான் அது **பி.வா.சா.ஆ.2**- ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.2- ன் படி 2ம் பிரதிவாதியின் சொத்து ரூ.950000/-க்கு கிரையம் கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தின் படி கிரைய தொகை சம்பந்தமாக என் மனைவி 2ம் பிரதிவாதிக்கு கணக்கு வழக்கு ஒப்படைத்தாரா என்று கேட்டால் 04.01.2013 அன்று முழு தொகையும் கொடுத்து பணப்பற்று ரசீதை என் மனைவி பெற்றுள்ளார். 2016 ம் ஆண்டில் சொத்தை பெத்தம்மாளுக்கு சொத்து கிரையம் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் 2013ம் ஆண்டு கிரைய பணம் கொடுத்து பணப்பற்று ரசீது பெற்றதாக கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 மற்றும் 4-ல் ஆறுமுகம் பிள்ளை மகன் முருகன் என்பவர் சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். முருகன் என் அக்காவின் மருமகன் ஆவார். முருகன் 2ம் பிரதிவாதியின் வீட்டிற்கு அருகில் வசித்து வருகிறார். முருகன் 2ம் பிரதிவாதியின் கணவரின் தம்பி மனைவி மீது காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கின் முடிவில் உமாமகேஸ்வரியின் சொத்தை முருகன் எழுதிவாங்கியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. ஜெயா என்பவர் மீது நானும் முருகனும் சேர்ந்து கடனுறுதிசீட்டு சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்யவில்லை. ஜெயாவிடமும், நானும் முருகனும் சேர்ந்து வழக்கின் முடிவில் சொத்தை எழுதி வாங்கியுள்ளோம் என்று சொன்னால் ஜெயா யார் என்றே எனக்கு தெரியாது. என் உடன் பிறந்த தம்பி பெயர் சங்கர சுப்பிரமணியம். சங்கர சுப்பிரமணியம் உமாமகேஸ்வரி மீது கடனுறுதிசீட்டு சம்பந்தமாக வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. நான் ஏலச்சீட்டு நடத்தி வந்ததில்லை. அந்த ஏலச்சீட்டில் பிரதிவாதிகள் உறுப்பினராக இருந்தார்கள் என்றும் அந்த ஏலத் தொகைக்காக பிரதிவாதிகள் பூர்த்தி செய்யப்படாத வெற்று புரோநோட்டை கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு கொடுக்கப்பட்ட புரோநோட்டை, என் மனைவி 2ம் பிரதிவாதி சொத்தை கணக்கு கேட்ட காரணத்தினால் பழிவாங்கும் நோக்கத்துடன் அந்த புரோநோட்டை பயன்படுத்தி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே அடமானம் நிலுவையில் இருக்கும் நிலையில் மீண்டும் கடன் கொடுக்க வாய்ப்புகள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகள் நல்ல வசதி வாய்ப்புடன் இருந்து வருவதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. ஜப்தி செய்யப்பட்ட வீடு தவிர வேறு சொத்துக்கள் பிரதிவாதிக்கு உண்டா என்று எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி ஆட்டோ ஓட்டுநராகவும், 2ம் பிரதிவாதி தையல் தொழில் செய்து கஷ்ட ஜீவனம் செய்து வருவதாலும் புரோநோட்டில்

கண்ட தொகையை நான் கடன் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம்பிரதிவாதியின் கணவர் தம்பி மனைவியின் சொத்தை கிரையம் வாங்கிய சொத்தின் மீதி பங்கு தான் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். முழு சொத்தையும் கைப்பற்றும் நோக்கத்துடன் நானும் முருகனும் சேர்ந்து ஆவணங்களை உற்பத்தி செய்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 04.01.2013 அன்று ரூ.7,15,000/- 2ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கு வாய்ப்பு இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் கடன் கொடுக்க வாய்ப்பே இல்லாத நிலையில் பிரதிவாதிகள் ஆவணங்கள் எழுதிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றும் மோசடியான ஆவணத்தை உற்பத்தி செய்து தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.